# சுபீட்சம்

நிகழ்நிலை பத்திரிகை; அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே

SUPEEDSAM EVERYTHING FOR PEOPLE

புதன்கிழமை 26.05.2021 supeedsam.com supeedsam@gmail.com







# மட்டக்களப்பில் உச்சம் தொட்ட கொரோனா

## என்றும் இல்லாதவாறு ஒரே நாளில் நேற்று 114 பேருக்கு தொற்று

## வாழைச்சேனையில் 4 பேருக்கு கோரோனா



(ந.குகதர்சன்)

வாழைச்சேனை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் இன்று செவ்வாய்க்கிழமை மேற்கொள்ளப்பட்ட அன்டிஜன் பரிசோதனையின் நான்கு பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதுடன், முதலாவது கொரோனா மரணம் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை

02 ஆம் பக்கத்தில்...

## கோரோனா விதிமுறைகளை மீறிய 500 பேர் கைது செய்யப்பட்டு விடுதலை



(எம்ஜிஏ நாஸர்)

கொரோனா பாதுகாப்பு விதிமுறைகளை மீறி வாகனங்களில் பயணம் செய்த ஐந்நூற்றுக்கு மேற்பட்டவர்கள் நேற்று செவ்வாய்க்கிழமை மட்டக்களப்பு ஏறாவூர்ப் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு எச்சரிக்கையின் பின்னர் விடுதலை செய்யப்பட்டனர்.

02 ஆம் பக்கத்தில்...



(வேதாந்தி)

மட்டக்களப்பு மாவட்டத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை முதற் தடவையாக அதிகூடிய கொரோனா தொற்று பதிவாகியுள்ளது.

அதற்கமைய நேற்று மாத்திரம் 114 பேருக்கு கொரோனா தொற்று உறுதி

02 ஆம் பக்கத்தில்...

## தனிமைப்படுத்தல் விதிமுறைகளை மீறிய 745 பேர் ஒரே நாளில் கைது

(ராஜ்)

தனிமைப்படுத்தல் விதிமுறைகளை மீறி செயற்பட்ட குற்றச்சாட்டில், கடந்த 24 மணிநேர காலப்பகுதிக்குள் 745 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதன்படி, நாட்டில் தனிமைப்படுத்தல் விதிமுறை அமுல்படுத்தப்பட்ட

02 ஆம் பக்கத்தில்...



## உணவின்றியும் உயிரிழக்கும் கொரோனா தொற்றாளர்கள்

(ஹஸ்பர் ஏ ஹலீம்)

உணவை தாமாக உட்கொள்ள முடியாது வைத்தியசாலையில் அனுமதிக்கப்படுகின்ற கொரோனா நோயாளர்கள் வீணாக உயிரிழக்கும் சந்தர்ப்பங்களும் ஏற்படுகின்றன என கிண்ணியா நகரசபையின் உறுப்பினரும், சமூக ஆர்வலருமான எம்.எம்.மஹ்தி தெரிவித்தார்.

கிண்ணியாவில் இருக்கும் தனது அலுவலகத்தில்

02 ஆம் பக்கத்தில்...

## மட்டு.வில் ஊழியர் ஒருவருக்கு கோரோனா

மட்டக்களப்பு மத்தியவீதியில் அமைந்துள்ள நிதி நிறுவனமொன்றில் கடமையாற்றும் உத்தியோகத்தர் ஒருவர் கொவிட்

02 ஆம் பக்கத்தில்...

## பிரின்ஸ் காசிநாதரின் நினைவாகவுள்ள பாலத்தினை அகற்றும் செயற்பாட்டினை மட்டக்களப்பு மக்கள் எதிர்க்க வேண்டும்



முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பிரின்ஸ் காசிநாதரின் நினைவாகவுள்ள பாலத்தினை அகற்றும் செயற்பாட்டினை மட்டக்களப்பு மக்கள் எதிர்க்க வேண்டும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு மாநகரசபையின் கோட்டை பூங்கா பகுதியில் செவ்வாய்கிழமை

02 ஆம் பக்கத்தில்...






## திருமலையில் மரணிப்போர் கிண்ணியாவில் நல்லடக்கம்

(அப்துல்சலாம் யாசீம், பொன் ஆனந்தம்)

திருகோணமலை மாவட்டத்தில் கொரோனா தொற்றினால் மரணிக்கின்ற மரணங்களை கிண்ணியாமஹமாறு கிராமத்தில் நல்லடக்கம் செய்ய சுகாதார சேவைகள் பணியகம் அனுமதி வழங்கியுள்ளதாக கிழக்கு மாகாண சுகாதாரசேவைகள் பணிப்பாளர் டாக்டர் ஏ.ஆர்.எம் தௌபீக் தெரிவித்தார்.

சுகாதார சேவைகள் பணியகத்தினால் நேற்று இந்த அனுமதி கடிதம் அனுப்பி

02 ஆம் பக்கத்தில்...









### திருமலை பொது வைத்தியசாலைக்கு

## பி.சி.ஆர் இயந்திரத்தை வழங்குமாறு கோரிக்கை

(அப்துல்சலாம் யாசீம்)

திருகோணமலை பொது வைத்தியசாலைக்கு பிசிஆர் இயந்திரத்தை உடனடியாக வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என சமூக அபிவிருத்தி கட்சி கோரிக்கை விடுத்துள்ளது.

சுகாதார இராஜாங்க அமைச்சர் பவித்ரா தேவி

02 ஆம் பக்கத்தில்...

## எதிர்க்கட்சி கொரோன பரவல் நளினுக்கும் உறுதி

எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார மற்றும் அவரது மனைவிக்கு கொரோனா

02 ஆம் பக்கத்தில்...









## கோழும்பு கடலில் வேடித்து சிதறிய கப்பல் மக்களுக்கு விடுக்கப்பட்டுள்ள எச்சரிக்கை

கொழும்பு துறைமுகத்துக்கு அப்பால் உள்ள கடற்பகுதியில் நங்கூரமிடப்பட்டுள்ள எக்ஸ்பிரஸ் பேர்ல் கப்பலில் ஏற்பட்ட தீப்பரவலின் காரணமாக, கடலில் விழுந்த 3 கொள்கலன்களில் எபோக்ஸி ரெஸின் (Epoxy Resin) என்ற இரசாயனம்

02 ஆம் பக்கத்தில்...

## எதிர்க்கட்சி கொரோன பரவல் நளினுக்கும் உறுதி

தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

'எனக்கும் எனது மனைவிக்கும் கொவிட்19 தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது' என்று பாராளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார பேஸ்புக் செய்தி ஒன்றை பதிவிட்டுள்ளார்.

கடந்த தினங்களில் தன்னைச் சந்தித்தவர்கள் தம்மை தனிமைப்படுத்திக் கொள்ளுமாறும் அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ மற்றும் மனைவி ஜலனி பிரேமதாஸ ஆகியோரும் கொரோனா தொற்றுக்குள்ளாகி, சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இதேவேளை, எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியின் பல பாராளுமன்ற உறுப்பினர்களும் சுய தனிமைப்படுத்தலில் இருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

## கொழும்பு கடலில் வெடித்து சிதறிய கப்பல் மக்களுக்கு

அடங்கியுள்ளமை தெரியவந்துள்ளது.

இந்த இரசாயனம் அடங்கிய கொள்கலன்களுக்கு (கன்டெய்னர்) அருகில் செல்லவேண்டாம் எனவும், குறித்த கொள்கலன்களை கண்டால் பொலிஸாருக்கோ, கடல்தொழில் காரியாலயத்துக்கோ அறிவிக்குமாறு, கொழும்பு, களுத்துறை மற்றும் நீர்கொழும்பு கடற்பகுதிகளில் மீன்பிடியில் ஈடுபடும் மீனவர்களிடம் கடல்தொழில் இராஜாங்க அமைச்சர் கஞ்சன விஜேசேகர கோரியுள்ளார்.

இந்த கொள்கலன்களில் அடங்கியுள்ள இரசாயனங்கள், சுவாசப் பிரச்சினைகள் மற்றும் ஒவ்வாமைகள் ஏற்படுத்தக்கூடியவை என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இரசாயன திரவியங்களை தாங்கியவாறு பயணித்த எக்ஸ்ப்ரஸ் பேர்ல் கப்பல் கடந்த 20 ஆம் திகதி கொழும்பு துறைமுகத்துக்குள் பிரவேசிப்பதற்கு 9.5 கடல்மைல் தொலைவில் நங்கூரமிடப்படிருந்தபோது தீப்பற்றியது. அதன்பின்னர், துறைமுக அதிகாரசபை, கடற்படையினர் மற்றும் விமானப்படையினர் இணைந்து இந்த தீயை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்திருந்தனர்.

எனினும், பலந்த காற்றின் காரணமாக, நேற்று காலை மீண்டும் அக்கப்பல் மீண்டும் தீப்பற்றியதுடன் அதிலிருந்த இரசாயனம் காரணமாக வெடிப்பும் ஏற்பட்டது. இதனையடுத்து 8 கொள்கலன்கள் கடலில் வீழ்ந்திருந்தன. அத்துடன், தீயினால் ஏற்பட்ட வெடிப்பு சம்பவத்தின் காரணமாக இருவர் காயமடைந்ததுடன், கப்பலில் இருந்த 25 பணிக்குழாமினரை இலங்கை கடற்படையினர் மீட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.




## மட்டு.வில் ஊழியர் ஒருவருக்கு கொரோனா

தொற்றுக்குள்ளான நிலையில் குறிப்பிட்ட நிலையம் மூடப்பட்டுள்ளதுடன் நிலையத்தில் கடமையாற்றிய 30பேரும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.







## பிரின்ஸ் காசிநாதரின் நினைவாகவுள்ள பாலத்தினை அகற்றும் செயற்பாட்டினை

இளைஞர்களினால் மரநடுகை வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இன்று காலை கோட்டை பூங்கா பகுதிக்கு வருகைதந்த இளைஞர்கள் இந்த வேலைத்திட்டத்தினை முன்னெடுத்தனர்.

அண்மையில் குறித்த பகுதியில் காட்சியளித்த மரங்கள் வெட்டப்பட்டதாக முகநூல்கள் ஊடாக பல்வேறு விமர்சனங்கள் முன்வைக்கப்பட்ட நிலையில் மட்டக்களப்பு இளைஞர்களினால் இந்த செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டது.

கோட்டை பூங்கா பகுதியானது இராணுவத்தின் கட்டுப்பாட்டிலிருந்த காலத்தில் மரங்கள் வளர்க்கப்பட்டு இயற்கை அழகு பொருந்திய பகுதியாக மாற்றப்பட்டிருந்த நிலையில் குறித்த பகுதியில் மரங்கள் வெட்டப்பட்டு குறித்த பகுதியின் இயற்கை அழகு இல்லாமல் செய்யப்பட்டுள்ளதாக இளைஞர்கள் தெரிவித்தனர்.

இவ்வாறு மரம் நடப்பட்ட நிலையில் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் வருகைதந்து குறித்த பகுதியை பார்வையிட்டனர்.

குறித்த பகுதியிலுள்ள இயற்கை தோனா பகுதியையும் மூடுவதற்கான நடவடிக்கையினை மாநகரசபை முன்னெடுத்துள்ளதாகவும் கழிவு குப்பைகளை கொட்டி அவற்றினை மூடுவதற்கு நடவடிக்கையெடுத்துள்ளதாகவும் அவற்றினையும் தடுத்து நிறுத்தவேண்டும் எனவும் இளைஞர்கள் இங்கு கோரிக்கை முன்வைத்தனர்.

தாமும் குறித்த சம்பவம் தொடர்பில் இளைஞர்களின் கோரிக்கைக்கு அமைவாக அப்பகுதிக்கு வருகைதந்து அங்கு மேற்கொள்ளப்பட்டுள்ளவை தொடர்பில் அவதானித்ததாக இரா.சாணக்கியன் தெரிவித்தார். இதன்போது கருத்து வெளியிட்ட இரா.சாணக்கியன், மட்டக்களப்பு மாநகர சபை எல்லையில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பிரின்ஸ் காசிநாதரின் பெயர் வைக்கப்பட்டுள்ள பாலம் இருக்கும் இந்த இடத்தில் கடந்த வாரத்திற்குள் நடைபெற்றுள்ள சில தவறான வேலைத்திட்டங்கள் குறித்து ஆராய்வதற்காக நான் இன்று இங்கு வந்துள்ளேன்.

உண்மையிலேயே மட்டக்களப்பு மாவட்டத்தினைச் சேர்ந்த இளைஞர்கள் இன்று காலை ஒன்று கூடி, சுகாதார நடைமுறைகளை பின்பற்றி இந்த இடத்திலே சில மரங்களை நடுவதாக சொல்லியிருந்தார்கள்.

எனவே இந்த இரண்டு விடயங்களையும் பார்வையிடுவதற்காக நான் இந்த இடத்திற்கு வருகை தந்துள்ளேன். உண்மையிலேயே கடந்த வாரம் இந்த இடத்திலே உள்ள மரங்களை வெட்டுவதாக சமூகவலைத்தளங்கள் ஊடாகவும், முகநூல் ஊடாகவும் பார்க்கக்கூடியதாக உள்ளது. அதே நேரத்தில் நேற்றைய தினம் அல்லது நேற்று முந்தினம் இந்த இடத்தில் குப்பைகளை கொண்டுவந்து, இந்த அழகாக திருத்த வேண்டிய இந்த பூங்காவிற்குள் உள்ள குளத்தினை குப்பைகளை போட்டு இதை மூடும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மாத்திரமல்லாமல் பல ஆண்டுகளாக மட்டக்களப்பு மெதடிஸ் மத்திய கல்லூரியின் அதிபராக கடமையாற்றிய பிரின்ஸ் காசிநாதரின் நினைவாக உள்ள இந்த பாலத்தினை அகற்றும் செயற்பாட்டினை மட்டக்களப்பு மாநகர சபையின் ஆணையாளர் ஆரம்பித்துள்ளதாக எங்களுக்கு சந்தேகமுள்ளது.

மட்டக்களப்பு மெதடிஸ் மத்திய கல்லூரியில் கல்வி கற்றுள்ள அனைத்து மாணவர்களும், இந்த விடயத்திற்கு எதிராக குரல் கொடுக்க வேண்டும். ஏன் என்றால் குறித்த பாடசாலையில் ஒரு வரலாற்று சாதனை படைத்த ஒருவர், நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த ஒருவர், மக்கள் நேசித்த ஒருவரின் நினைவாகவுள்ள இந்த பாலத்தினை அழிக்கின்ற செயற்பாட்டினை நாங்கள் வன்மையாக கண்டிக்க வேண்டும்.

இந்த விடயங்கள் ஒரு நாடாளுமன்ற உறுப்பினர் பார்வையிட வேண்டிய விடயம் அல்ல. ஆனால் அரசியல் பின்புலத்தில் மக்களில் அக்கறை இன்றி இயங்கும் நபர்களினால் இவ்வாறான அராஜகங்களை வந்து பார்க்க வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளோம்.' எனக் குறிப்பிட்டுள்ளார்.

## திருமலை பொது வைத்தியசாலைக்கு பி.சி.ஆர் இயந்திரத்தை வழங்குமாறு கோரிக்கை

வன்னியாராய்சிக்கு அக்கட்சியின் பொதுச் சயலாளர் குகதாஸ் பிரகாஷ் கடிதமொன்றை தொலைநகல் மூலம் அனுப்பி வைத்துள்ளார்.

திருகோணமலை மாவட்டத்தில் கொரோனா தொற்று அதிகளவில் காணப்படுவதால் சந்தேகமான நோயாளர்களை பரிசோதனை செய்வதற்காக மாதிரிகள் பெறப்பட்டு மட்டக்களப்பிற்கு அனுப்பி வைக்கப்பட்டு மூன்று நாட்களுக்கு பின்னரே அறிக்கைகள் வருவதாகவும் இதனால் அவர்களின் வீதம் அதிகரித்து வருவதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மேலும் மூவின மக்களும் திருகோணமலை மாவட்டத்தில் வாழ்ந்து வருகின்ற நிலையில் கிழக்கு மாகாணத்தின் தலைநகராக கொண்ட திருகோணமலை பொது வைத்தியசாலையில் பிசிஆர் இயந்திரம் இல்லாமை தொடர்பில் பொதுமக்கள் மிகவும் அதிருப்தியை வெளிப்படுத்தி வருகின்றனர்.

ஆகவே திருகோணமலை பொது வைத்தியசாலைக்கு மிக விரைவாக பிசிஆர் இயந்திரத்தை வழங்க நடவடிக்கை எடுக்குமாறு தாழ்மையுடன் கேட்டுக் கொள்வதாகவும் அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## திருமலையில் மரணிப்போர் கிண்ணியாவில் நல்லடக்கம்

வைக்கப்பட்டுள்ளது.

திருகோணமலை மாவட்டத்தில் கொரோனா தொற்றினால் பாதிக்கப்பட்டு உயிரிழந்தவர்களின் சடலங்களை இது வரைக்கும் ஓட்டமாவடி பிரதேசத்திற்கு கொண்டு சென்று நல்லடக்கம் செய்யப்பட்டது.

இருந்த போதிலும் ஏற்கனவே திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபர் சமன் தர்ஷன் பாண்டிகோரல அவர்களின் ஆலோசனையின் பேரில் கிண்ணியா பிரதேச செயலாளர் எம்.எச்.கனி ஆகியோரின் வேண்டுகோளுக்கிணங்க திருகோணமலை பிராந்திய சுகாதார சேவைகள் பிரதி பணிப்பாளர் வீ.பிரேமானந் தலைமையிலான குழுவினர் சென்று குறித்த இடத்தை ஏற்கனவே பார்வையிட்டனர்.

இதனையடுத்து அந்த இடத்தின் அறிக்கைகளை திருகோணமலை பிராந்திய சுகாதார சேவைகள் பணியகம் மத்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்திற்கு அனுப்பி வைத்திருந்த நிலையில் இன்று முதல் கொரோனா தொற்றினால் மரணிக்கின்றவர்களை கிண்ணியா பிரதேசத்தில் உள்ள மஹமாறு கிராமத்தில் நல்லடக்கம் செய்வதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

## உணவின்றியும் உயிரிழக்கும் கொரோனா தொற்றாளர்கள்

வைத்து ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

தொடர்ந்துமா கருத்து தெரிவித்த அவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப் படுகின்ற நோயாளர்களில் சிலர் தாமாக உணவை உண்பதற்கோ அல்லது தேநீரை தயாரித்து குடிப்பதற்கோ இயலாத நோயாளர்கள் சக்தி இழந்து வீணாக உயிர் இழக்கின்ற வாய்ப்புகளும் ஏற்படுகின்றன.

எனவே இவ்வாறான நோயாளர்களை வைத்தியசாலையில் வைத்து சிகிச்சை வழங்குவதை விட முறையான சுகாதார ஆலோசனை வழிகாட்டலின் பிரகாரம் தனது வீட்டில் வைத்து பராமரிக்கப் படுவதற்கான சந்தர்ப்பத்தை அல்லது வைத்தியசாலையில் உதவியாளர் ஒருவர் அனுமதிக்கின்ற சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் என சுகாதார திணைக்கள அதிகாரிகளிடமும் வைத்தியர்களிடமும் கேட்டுக்கொள்வதாக கேட்டுக் கொள்வதாக அவர் குறிப்பிட்டார்.

## தனிமைப்படுத்தல் விதிமுறைகளை மீறிய 745 பேர் ஒரே நாளில் கைது

நாள் முதல் அதிக எண்ணிக்கையிலான நபர்கள் நேற்றைய தினம் கைது செய்யப்பட்டதாக பொலிஸ் ஊடக பேச்சாளர், பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹன தெரிவித்தார்.

முக கவசங்களை அணியாமை மற்றும் சமூக இடைவெளியினை பின்பற்றாமை உள்ளிட்ட தனிமைப்படுத்தல் விதிமுறைகளை மீறி செயற்பட்ட நபர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளதாக அவர் மேலும் குறிப்பிட்டார்.

இந்த நிலையில், தனிமைப்படுத்தல் விதிமுறைகள் அமுல்படுத்தப்பட்ட கடந்த வருடம் ஒக்டோபர் மாதம் 30 ஆம் திகதி முதல் இதுவரையான காலப்பகுதியில், 13ஆயிரத்து 493 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதன்படி, இது தொடர்பான கண்காணிப்பு நடவடிக்கைகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படும் எனவும், சுகாதாரத் தரப்பினால் வழங்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்களை பின்பற்றி செயற்படுமாறும், பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹன கேட்டுக் கொண்டுள்ளார்.

## வாழைச்சேனையில் 4 பேருக்கு கொரோனா

மாலை அடையாளம் செய்யப்பட்டுள்ளதாகவும் வாழைச்சேனை சுகாதார வைத்திய அதிகாரி தேவராஜமுதலி ஸ்டீப் சஞ்ஜீவ் தெரிவித்தார்.

வாழைச்சேனை மீன்பிடித் துறைமுகத்தில் கடமையாற்றும் ஊழியர்கள் மற்றும் வெளிநபர்கள் இருபத்தி ஐந்து பேருக்கு மேற்கொள்ளப்பட்ட அன்டிஜன் பரிசோதனையில் மீன்பிடித் துறைமுகத்தில் கடமையாற்றும் ஊழியர் ஒருவருக்கும், வெளிநபர்கள் மூவரும் கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. அத்தோடு வாழைச்சேனை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் முதலாவது கொரோனா மரணம் இடம்பெற்ற நிலையில் மரணித்த ஓய்வுபெற்ற 63 வயதுடைய பெண் வைத்தியரின் முதலாவது நேரடி தொடர்புடையவர்கள் பதினாறு பேருக்கு பி.சீ.ஆர். பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டது, இதன் மாதிகள் பரிசோதனைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக வாழைச்சேனை சுகாதார வைத்திய அதிகாரி தேவராஜ முதலி ஸ்டீப் சஞ்ஜீவ் தெரிவித்தார். குறித்த பி.சீ.ஆர். பரிசோதனையில் மேற்பார்வை பொதுச் சுகாதார பரிசோதகர் ஆர்.நிதிராஜ் மற்றும் சுகாதார வைத்திய அதிகாரி அலுவலக உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர்.

வாழைச்சேனை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் கொரோனா தொற்று அதிகரித்து காணப்படும் நிலையில் மக்களின் பாதுகாப்பு கருதி தொடரச்சியாக பி.சீ.ஆர். பரிசோதனை மற்றும் அன்டிஜன் பரிசோதனைகள் என்பன இடம்பெற்று வருகின்றது.

## மட்டக்களப்பில் உச்சம் தொட்ட கொரோனா

யாகியுள்ளதாக மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் கணபதிப்பிள்ளை கருணாகரன் தெரிவித்தார்.

இந்த எண்ணிக்கையே இதுவரையான காலத்தில் மட்டக்களப்பில் பதிவான அதிகூடிய எண்ணிக்கை எனவும் அவர் தெரிவித்தார். மட்டக்களப்பில் 9 பேரும், வாழைச்சேனையில் 4 பேரும், களுவாஞ்சிக்குடியில் மரணவீடொன்றுக்கு சென்ற 10 பேரும், காத்தான்குடியில் 14 பேரும், ஓட்டமாவடியில் 2 பேரும், கோறளைப்பற்று மத்தியில் 12 பேரும், செங்கலடியில் 2 பேரும், ஏறாவூரில் 9 பேரும், வெல்லாவெளியில் 2 பேரும், வவுணதீவில் 11 பேரும், ஆரையம்பதியில் 17 பேரும், கிரான் பிரதேசத்தில் 8 பேரும், பட்டிப்பளை பகுதியில் ஒருவரும் என நேற்று பதிவாகியுள்ளது. மேலும் சிறைச்சாலை கைதிகள் 5 பேரும் பொலிஸார் ஐவரும் தொற்றுக்குள்ளாகியுள்ளதாக மாவட்ட அரசாங்க அதிபர் தெரிவித்தார்.

இந்நிலையில், நேற்றைய கொரோனா நிலைவரம் தொடர்பாக பிராந்திய சுகாதார பணிப்பாளர் டாக்டர் நாகலிங்கம் மயூரன் தெரிவிக்கையில்;

நேற்று செவ்வாய்க்கிழமை வவுணதீவு பிரதேசத்தில் தொற்றுக்குள்ளான 12 யுவதிகளும் மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள தனியார் ஆடை தொழிற்சாலையில் பணிபுரிபவர்கள் என தெரிவித்தார்.

மேலும் நேற்றைய தொற்றுடன் மட்டக்களப்பு மாவட்டத்தில் 3 ஆவது அலைக்கு பின்னர் இதுவரை 921 பேர் கொரோனா தொற்றுக்குள்ளாகியுள்ளனர். இதில் 750 க்கு மேற்பட்டவர்கள் சிகிச்சை பெற்று வருவதுடன், 16 பேர் மரணமடைந்துள்ளனர் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## கொரோனா விதிமுறைகளை மீறிய 500 பேர் கைது செய்யப்பட்டு விடுதலை

கொரோனா தொற்றினை கட்டுப்படுத்தும் நோக்குடன் அமுல் செய்யப்பட்டிருந்த பயணக்கட்டுப்பாடு தளர்த்தப்பட்ட நிலையில் அத்தியாவசிய தேவையின்றி இவர்கள் வாகனங்களில் பயணம் செய்ததாக ஏறாவூர்ப் பொலிஸ் நிலையப்பொறுப்பதிகாரி கீர்த்தி ஜயந்த தெரிவித்தார்.

ஏறாவூர் பிரதேசத்தில் விதிமுறைகளுக்கு மாறாக திறக்கப்பட்டிருந்த முப்பது வர்த்தக நிலையங்கள் ஏறாவூர்ப் பொலிஸாரின் உத்தரவினையடுத்து மூடப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

மாவட்ட பிரதிப்பொலிஸ் மாஅதிபர் லக்சிறி விஜேசேனவின் பணிப்புரைக்கமைவாக சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சுதத் மாசிங்வின் வழிகாட்டலில் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் ஜிஎஸ். ஜயசுந்தரவின் தலைமையில் ஏறாவூர்ப் பிரதேசத்தில் பொலிஸ் குழுவினர் விசேட கண்காணிப்பில் ஈடுபட்டிருந்தனர். இதேவேளை பயணக்கட்டுப்பாடு தளர்த்தப்பட்டதையடுத்து ஏறாவூர் நகரம் சுறுசுறுப்பாக இயங்கியதை அவதானிக்க முடிந்தது.

பொதுமக்கள் சுகாதார வழிமுறைகளை பின்பற்றி சமூக இடைவெளியுடன் அத்தியாவசிய பொருட் கொள்வனவில் ஈடுபட்டனர்.

SwissLife
Select

சுவிசில் சொந்த வீடு
வாங்க விரும்பும் உறவுகளே,
அவதானமாகச் செயற்படுங்கள்.
உங்கள் கடனுக்கான வட்டி வீதம்
எப்போதும் அதிகரிக்க கூடும்.
எனவே, சரியான வங்கியையும்,
வட்டி வீதத்தையும்
தெரிந்து கொள்ளுங்கள்.

உங்கள் வாழ்வின் சகல
அம்சங்களிலும் உங்களோடு
கரங் கோர்க்கும்
ஒரே ஒரு நிறுவனம்...

மருத்துவ காப்புறுதி
வாகனக் காப்புறுதி
குழந்தைகளுக்கான காப்புறுதி
ஆயுட் காப்புறுதி
சட்டக் காப்புறுதி



Herr Krishnasamy
THILEEPAN
Dipl.Finanzberater IAF
Cicero : 15787
FIDLEG : KT 47598
Swiss Life Select AG
Zweigniederlassug Bern-Köniz
Sägerstrasse 79, 3098 Köniz.

Email : krishnasamy.thileepan@swisslife-select.ch | Web : www.swisslife-select.ch
Telefon : 031 915 00 50 Telefax : 031 915 00 60 Handy : 079 889 60 65

உதயகுமார் கல்வி நிலையம்



முனைக்காடு மேற்கு,
கொக்கட்டிச்சோலை
தொடர்புகளுக்கு:
076-1549129
+966539028295
+0966502126923
n.uthayakumar1981@gmail.com

SRI JEWELLERY



Swiss, Zürich இல் மிகப்
பிரமாண்டமாய் புதுப்பொலிவுடன்
பரம்பரை பரம்பரையாக
நகைத் தொழிலில்
அனுபவம் பெற்றவர்கள் நாங்கள்
வைர தாலி கொடி, மோதிரம், வளையல்
பெயர் பெண்டன், மற்றும் அனைத்து
நகைகளும் செய்து தரப்படும்.
திருத்த வேலைகளும் உடனுக்குடன்
செய்து தரப்படும்.
+41 43 366 80 09 / +41 79 898 51 01
Mattengasse 17, 8005, Zürich, Swiss
info@srijewellery.ch

SHELVA SWISS
YOUR FUTURE OUR VISION
041 790 64 63 079 514 64 28
வீட்டுக்கடன்
0.62%
தொடக்கம்
10% இல்
சொந்த வீடு கட்ட
அல்லது வாங்க
- இருக்கும் வீட்டை வைத்து இன்னொரு வீட்டை வாங்க...
- வீடு வாங்க. விற்க, கட்ட, திருத்த...
- வீடு வாங்குவதற்கான ஆயுட்காப்புறுதி
- Architect வேலைகள்
இலங்கையில் வீடுகள், காணிகள்,
விற்க, வாங்க, கட்ட, திருத்த
இலங்கைக்கு போக
வேண்டிய தேவை இல்லை.
SWISS இல் இருந்து
கொண்டே செய்யலாம்.
» கிறங்கன்காசே » பயணக்காப்புறுதி
» ஆயுட்காப்புறுதி » சட்டக் காப்புறுதி

Aaran Ayurveda
& Wellness Massage



Weinberg Strasse - 22, 8001 Zurich, Tel: 043 243 60 66
Mobile: 079 940 1510 | 077 982 1291 | www.aaranayurveda.ch
Krankenkasse Anerkannt

MATHE BILDUNGSZENTRUM
கணித கற்கைநெறி மையம்
MBZ
கல்வியே துணை
பள்ளித் தலைமைத்தும் பேறெடுக்கும் பிள்ளைகள்.
அள்ளிப் பெற்றுவரும் நிறைவான புள்ளிகள்!
உள்ளதை சொல்வதெனில் எங்ஙனம் சாத்தியம்..
எள்ளளவும் பொய்யில்லை எட்டிவந்து பாரும்!!
- MATHE BILDUNGSZENTRUM
Mathe மகேந்திரா-வின் தெளிவான கற்பித்தலில் திருப்தியுறும் பெற்றோர்கள்.
S.MAHENDIRAN
076 431 83 79
mbz.mahe@gmail.com
MATHE மட்டுமல்ல
Deutsch, Französisch, Englisch, Gymi Prüfung
BMS, HMS, FMS, Gymi Probe
அத்தனைக்கும் கீழ்காணும் இடங்களில்
Oerlikon, Uster, Schaffhausen

# டயகமயில் உள்ள தேசிய கால்நடை பண்ணை, சந்திரிகாம தோட்ட பகுதி ஆகியன தனிமைப்படுத்தல்

(க.கிஷாந்தன்)

நுவரெலியா - டயகமயில் உள்ள தேசிய கால்நடை பண்ணையும், சந்திரிகாம தோட்ட பகுதியும் நேற்று காலை முதல் தனிமைப்படுத்தப் பட்டுள்ளதாக நுவரெலியா சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயம் தெரிவித்துள்ளது.

இந்த பகுதியில் மேற்கொள்ளப் பட்ட பீ.சீ.ஆர் பரிசோதனைக்கு அமையவே இவ்வாறு தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இதன்படி டயகம தேசிய கால் நடை பண்ணையில் 35 பேருக்கும்,



சந்திரிகாம தோட்டப்பகுதியில் இருவருக்கும் தொற்று உறுதி செய்யப் பட்டுள்ளது.

இந்த நிலையில் அந்த பகுதிக்குள் உட் பிரவேசிக்கவும் அங்கிருந்து வெளிச் செல்லவும் தடை விதிக்கப் பட்டுள்ளது.

இவ்வாறு அமுலாகியுள்ள பயணத் தடை மீள் அறிவிக்கும் வரை அமுலில் இருக்கும் என நுவரெலியா சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயம் தெரிவித்துள்ளது. இந்த நிலையில் அங்கு பலத்த பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.

இதுவரை இப்பகுதியில் 50ற்கும் மேற்பட்ட குடும்பங்கள் தனிமைப் படுத்தப்பட்டுள்ளதோடு, இன்னும் சிலருக்கு பீ.சீ.ஆர் பரிசோதனை மேற்கொள்ளவுள்ளதாகவும் நுவரெலியா சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயம் தெரிவித்துள்ளது.

# மலையகத்தில் நீர்தேக்கங்களின் வான் கதவுகள் திறப்பு





(க.கிஷாந்தன்)

மத்திய மலைநாட்டில் பெய்து வரும் அடைமழையால் நீர்த்தேக்கங்களின் நீர்மட்டமும் வெகுவாக அதிகரித்து வருகின்றது. இந்நிலையில் மேல் கொத்மலை நீர்த்தேக்கத்தின் இரண்டு வான் கதவுகள் திறக்கப்பட்டுள்ளன.

நேற்று இரவு ஒரு வான்கதவு திறக்கப்பட்ட நிலையில் நீர்மட்டம் அதிகரித்ததால் இன்று அதிகாலை மேலும் ஒரு வான்கதவு திறக்கப்பட்டது.

இதனால் சென்கிளயர் நீர்வீழ்ச்சியின் நீர்மட்டமும் அதிகரித்து ரம்மியமாக காட்சியளிக்கின்றது.

அத்துடன், மேல் கொத்மலை அணைக்கட்டுக்கு கீழ் ஆற்றுப் பகுதியை பயன்படுத்துபவர்கள் விழிப்புடன் இருக்குமாறு கோரப் பட்டுள்ளது.

இந்த மழை காரணமாக லக்ஷபான நீர்தேக்கத்தின் இரண்டு வான்கதவுகள், கெனியன் விமலசுரேந்திர, நவ லக்ஷபான ஆகிய நீர்தேக்கங்களின் நீர்மட்டம் அதிகரித்துள்ளதுடன், வான்கதவுகளும் திறக்கப்பட்டுள்ளதாக மின்சார சபை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

# பலத்த காற்றினால் மரம் முறிந்து விழுந்ததில் வீட்டுக்கு பலத்த சேதம்

## தம்பலகாமத்தில் சம்பவம்






(ஹஸ்பர் ஏ ஹலீம்)

கடும் பலத்த காற்று வீசியதன் காரணமாக குடியிருப்பு வீட்டின் மேல் மரம் முறிந்து விழுந்ததில் சேதம் விளைவிக்கப்பட்டுள்ளது. திருகோணமலை மாவட்டம் தம்பலகாமம் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட சிராஜ் நகர் பகுதியில் உள்ள வீடொன்றே இவ்வாறு சேதமாக்கப்பட்டுள்ளதாக வீட்டு குடியிருப்பாளர் தெரிவிக்கின்றனர்.

நேற்று முன்தினம் காலை வீசிய பலத்த காற்றினால் தனது வீட்டின் அருகாமையில் உள்ள பாரிய பனை மரம் ஒன்று முறிந்து விழுந்ததால் வீட்டின் ஒரு பகுதி உட்பட கூரை என பல சேதம் விளைவிக்கப்பட்டுள்ளதாகவும் மலசலகூடமும் உடைந்து சேதமாக்கப் பட்டுள்ளதாகவும் தெரிவிக்கின்றனர்.

எனவே தொடர் காற்று காரணமாக உரிய பகுதியில் குடியிருக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும் தனக்கு மூன்று பிள்ளைகள் உள்ளதாகவும் தான் நாளாந்தம் சிறிய கடை மூலமான வருமானத்தை நம்பியே வாழ்ந்து வருவதாகவும் கணவனை இழந்த நிலையில் வாழ்வாதார நிலையும் மோசமாக பாதிப்படைந்து இக்கட்டான நிலையில் தற்போதைய கொரோனா நிலை காரணமாக முடக்கப்படுகின்ற போது பின் தங்கிய நிலைக்கு தள்ளப்படுவதாகவும் மேலும் கவலை வெளியிடுகிறார்கள். எனவே தனக்கு வீட்டு சேதத்துக்கான நஷ்ட ஈட்டுத் தொகையை பெற உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்குமாறும் கோரிக்கை விடுக்கின்றனர்.

# ஓரிசா மாநிலத்தை இன்று அடையவுள்ள 'யாஷ்' சூறாவளி




யாஷ் சூறாவளி ஆனது நேற்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 05.30 மணிக்கு செய்யப்பட்ட பகுப்பாய்வின்படி, மணிக்கு 15km/h வேகத்தில் வடக்குவடமேற்கு திசையில் நகர்ந்து வடமேற்கு வங்காளவிரிகுடா கடல் பிராந்தியத்தில் காணப்பட்டது என ஓய்வு பெற்ற சிரேஷ்ட வானிலை அதிகாரி சூர்யகுமாரன் தெரிவித்தார்.

இது யாழ்ப்பாணத்திலிருந்து வடக்குவடகிழக்காக 1360 கிலோமீற்றர் தூரத்திலும் திருகோணமலையிலிருந்து வடகிழக்காக 1420 கிலோமீற்றர் தூரத்திலும் PARADIP நகரிலிருந்து கிழக்குதென்கிழக்காக 160 கிலோமீற்றர் தூரத்திலும், BALASORE நகரிலிருந்து தெற்குதென்கிழக்காக 250 கிலோமீற்றர் தூரத்திலும், DIGHA நகரிலிருந்து தெற்குதென்கிழக்காக 240 கிலோமீற்றர் தூரத்திலும், SAGAR தீவிலிருந்து 230 கிலோமீற்றர் தூரத்திலும் காணப்பட்டது. இந்த சூறாவளியானது வடக்குவடமேற்கு திசையில் நகர்ந்து இன்று காலை DHAMRA PORT அருகே வடக்கு ஒரிசா மாநிலத்தை அடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இது வடக்கு ஒரிசாவிற்கும் மேற்கு வங்காளத்தின் கரையோரப் பகுதிக்கும் இடையில் PARADIP நகருக்கும் SAGAR தீவுக்கும் இடையே வடக்கு DHAMRA நகரத்திற்கும் தெற்கு BALASORE நகருக்கும் இடையே வலுவான சூறாவளியாக (VERY SEVERE CYCLONICSTORM) இன்று மதியம் ஊடறுக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

**ஓய்வு பெற்ற சிரேஷ்ட**
**வானிலை அதிகாரி**
**சூர்யகுமாரன்**

# அம்பாறை பொது வைத்தியசாலையில் பி.சி.ஆர் இயந்திரம் பொருத்த நடவடிக்கை

## மாகாண பணிப்பாளர்



(பைஷல் இஸ்மாயில்

அம்பாறை பொது வைத்தியசாலையில் பி.சி.ஆர் இயந்திரம் பொருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக, கிழக்கு மாகாண சுகாதார வேவைகள் பணிப்பாளர் டொக்டர் ஏ.ஆர்.எம். தௌபீக் தெரிவித்தார்.

அம்பாறை மாவட்டத்தில் கொவிட் 19 தொற்று பரவலை கட்டுப்படுத்துவது தொடர்பான உயர் மட்டக் கூட்டம் அம்பாறை

மாவட்ட செயலகத்தில் இராஜாங்க அமைச்சர் விமல வீர திஸாநாயக்க தலைமையில் நடைபெற்றது. இதன் போதே இதற்கான தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

# வைகாசி விசாகம் !



நட்சத்திரங்கள் இருபத்தி ஏழில், சில நட்சத்திரங்கள் இறைவனுக்கு உகந்த நட்சத்திரங்களாகவும், இறைவன் அவதாரம் எடுத்த நட்சத்திரங்களாகவும் கருதப்படுகின்றது. அந்த அடிப்படையில் வைகாசி மாதம் வரும் விசாகம் நட்சத்திரம் வடிவேலனுக்கு உகந்த நட்சத்திரமாக பக்தர்கள் அனைவராலும் கொண்டாடப்படுகிறது. அன்றைய தினம் வேலனை வழிபட்டால் வெற்றிகள் வந்து சேரும். குமரனை வழிபட்டால் குறைகள் அகலும். கார்த்தி கேயனை வழிபட்டால் கவலைகள் பறந்தோடும். கந்தப்பெருமானை வழிபட்டால் கைநிறையப் பொருள் குவியும்.

வைகாசி மாதத்தில் சந்திரன் பவுர்ணமி நாளில் விசாக நட்சத்திரத்தில் சஞ்சரிக்கும். அதனாலேயே இந்த மாதம் 'வைசாக' மாதம் என்றிருந்து பின்னாளில் 'வைகாசி' என்றானது. இந்த மாத பவுர்ணமி நாளை 'வைகாசி விசாகம்' என்று குறிப்பிடுகிறோம். இந்த நாளில் தான் முருகப்பெருமான் அவதாரம் செய்ததாக சாஸ்திரங்கள் கூறுகின்றன.

வைகாசி விசாக நாள் ஒன்றில்தான், தாணு அபர்ணா விசாக அவதாரம் நிகழ்ந்தது என்கிறது சோமாஸ்கந்த தத்துவம் எனும் புராதன நூல். அதாவது, சிவபெருமான் ஓங்கி உயர்ந்து வளர்ந்த மரமாக நிற்க, அம்பிகை பார்வதி அந்த மரத்தில் பற்றிப் படர்ந்த கொடியாகப் பிணைந்திருக்க, அந்த மரத்தின் கீழ் சிறிய கன்றுச் செடியாக ஆறுமுகன் தோன்றினாராம். முதன்முதலாக அமைந்த சோமாஸ்கந்த வடிவம் அதுவே.

ஆழ்வார்களில் தலைமையானவராகப் போற்றப்படும் நம்மாழ்வார், வைகாசி விசாகத் திருநாளில்தான் பிறந்தார். திருவரங்கனே, 'இவர் நம் ஆழ்வார்' என அன்போடு அழைத்தாராம். ஒன்பதாம் நூற்றாண்டில், திருக்குருகூர் என்ற ஆழ்வார் திருநகரியில், பிரமாதி வருடம், வைகாசி மாத விசாக நட்சத்திரத்தில் தோன்றியவர். வைகுண்டத்தின் தலைமைத் தளபதியாகக் கருதப்படும் விஷ்வக்சேனரின் அவதாரமே இவர் என்று கூறுவர்.

பகவான் புத்தர் அவதாரம் செய்தது, ஞானம் பெற்றது, பரிநிர்வாணம் அடைந்தது ஆகியன எல்லாம் வைகாசி விசாக நாட்களில் நிகழ்ந்தன. அதனால்தான் பௌத்தர்கள் வைகாசி விசாக நாளைப் புத்தபூர்ணிமா என்று கொண்டாடுகின்றனர். இது உலகம் முழுவதும் கொண்டாடப்படும் திருநாளாகும்.

அன்னை பராசக்தியை ஞானேஸ்வரியாகப் போற்றுகின்றோம். அவள் வைகாசி விசாக நாளில் ஞானேஸ்வரியாகக் காட்சி தருகின்றாள். சென்னை மயிலாப்பூர் கபாலீசுவரர் ஆலயத்தில் எழுந்தருளியிருக்கும் அன்னை கற்பகவல்லி, வைகாசி விசாக நாளில் ஞான பரமேஸ்வரியாகக் காட்சி தருகிறாள். அந்நாளில் அவள் இடுப்பில் ஞானவாளுடன் காட்சி தருகிறாள். அது அன்பர்களின் அஞ்ஞானத்தை வேரோடு வெட்டி எறியும் ஞான வாளாகும். இத்தகைய காட்சிவேறெந்தக் கோயிலிலும் காணக்கிடைக்காதது.

தென்சிதைக் காவலனான தர்மதேவனுக்கும் விசாக நட்சத்திரம் உரியது. எனவே அன்றைய தினம் எமதர்மனை மனதார நினைத்து வணங்குவதால், அகால மரணம் வராது; மரணபயம் தீரும் என்கிறன்றன புராணங்கள்.

'மழபாடியுள் மாணிக்கமே' என்று சுந்தரமூர்த்தி நாயனார் போற்றிப் பாடிய திருமழபாடி திருத்தலத்து இறைவன், மார்க்கண்டேய முனிவருக்காக முழுவினை கையில் ஏந்தி திருநடனம் புரிந்த தினம் வைகாசி விசாகம். மழு ஏந்தி ஆடியதால் திருமழுவாடி. அதுவே திருமழபாடி.

அர்ஜுனன், கிருஷ்ணரின் அறிவுரைப்படி சிவபெருமானை வேண்டித் தவமிருந்து பாசுபத அஸ்திரத்தைப் பெற்றதும் வைகாசி விசாக நாளில்தான்.

வைகாசி விசாகத்தன்று திருத்தணியில் வழங்கப்படும் விபூதியும் பாதரேணு எனப்படும் சந்தனமும் தீராத வியாதிகளைத் தீர்க்கும்.

ஆந்திர மாநிலம், சிம்மாசலத்தில் நரசிங்கப் பெருமாளை வைகாசி விசாக நாளில் தரிசனம் செய்வர். இந்நாளில் பெருமாளின் உருவத்தை முழுவதுமாக மறைத்திருக்கும் சந்தனக்காப்பை அகற்றி விட்டு திருமஞ்சனம் செய்வர். பக்தர்களுக்கும் தரிசனம் கிடைக்கும். மறுநாளே மீண்டும் சந்தனக் காப்பிட்டு விடுவார்கள். மீண்டும் அடுத்த வைகாசி விசாகத் தினத்தன்றுதான் திருமஞ்சன தரிசனம்.

முருகனை வழிபட ஆடிக் கிருத்திகை, பங்குனி உத்திரம் போல வைகாசி விசாகமும் மிகவும் சிறப்பான நாளாக கருதப்படுகிறது. வைகாசி விசாக நாளில் முருகனை நினைத்து விரதம் இருந்து வணங்குவது சகலவித சம்பத்துக்களையும் தரும்.

**'விசாகம் ஸர்வபூதாநாம் ஸ்வாமிநம் க்ருத்திகா சுதம்**
**ஸதா பாலம் ஜடாதரம் ஸ்கந்தம் வந்தே சிவாத்மஜம்'**

விசாக நடந்சத்திரத்தில் அவதரித்தவரும், சகல உயிர்களுக்கும் தெய்வமாக - தலைவராக இருப்பவரும் கார்த்திகை பெண்களின் பாலரும், எப்போதும் குழந்தை வடிவிலேயே காட்சியளிப்பவரும், இளமையானவரும், ஜடாமகுடம் தரித்தவரும், சிவபெருமானின் மைந்தனும் ஆகிய ஸ்கந்தனை வணங்குகின்றேன் .

என்ற துதியை மனதாரச் சொல்லி, மயில்வாகனனை போற்றி அபிஷேக, ஆராதனைகள் செய்து சகல சங்கடங்களும் நீக்கி வாழ்வில் வளமும் மகிழ்ச்சியும் பெறுவோமாக .

கலியுகத்தின் கண்ட தெய்வமாக விளங்குபவர் கந்தப்பெருமான். அவரது வேலை வணங்குவதே வேலையாக கொள்ள வேண்டிய நாள் விசாகத் திருநாளாகும். அன்றைய தினம் குடை, மோர், பானகம், தயிர்சாதம் போன்றவற்றைத் தானமாகக் கொடுத்தால் நல்ல பலன் கிடைக்கும். எனவே விசாகத் திருநாளில் வேலவனின் சன்னிதி செல்லுங்கள். வேண்டிய வரங்களைப் பெற்று நிம்மதியைக் காணுங்கள்.

**( வி.ரி.சகாதேவராஜா)**

# பொருட்கள் கொள்வனவில் மக்கள்

## நகரங்களுக்குள் நுழைந்த வாகனங்கள் திருப்பி அனுப்பப்பட்டன





(க.கிஷாந்தன்)

நேற்று காலை 4 மணியுடன் அமுலில் இருந்த நடமாட்டக் கட்டுப்பாடு தற்காலிகமாக தளர்த்தப்பட்டதால் மலையக பகுதிகளில் வாழும் மக்கள் நகரங்களுக்கு வருகைத்தந்து பொருட் கொள்வனவில் ஈடுப்பட்டனர்.

அட்டன், தலவாக்கலை, நுவரெலியா உள்ளிட்ட மலையக நகரங்களில் மக்கள் இன்று காலை முதல் பொருட் கொள்வனவில் ஈடுப்பட்டு வருவதை காணகூடியதாக இருந்தது.

மலையக பகுதிகளில் பெய்து வரும் கடும் மழையையும் பொருட்படுத்தாது மக்கள் நகரங்களில் உள்ள வர்த்தக நிலையங்களில் அத்தியாவசிய பொருட்களை கொள்வனவு செய்து வந்தனர்.

நகரங்களுக்கு வரும் மக்களும், வாகனங்களும் பொலிஸாரால் கடுமையாக பரிசோதிக்கப்பட்டதுடன் அநாவசியமாக அட்டன் மற்றும் தலவாக்கலை உள்ளிட்ட நகரங்களுக்குள் நுழைந்த வாகனங்கள் கடுமையாக பரிசோதிக்கப்பட்டு திருப்பியனுப்பட்டன.

எதிர்வரும் 31 ஆம் திகதி அதிகாலை 4 மணிக்கு தளர்த்தப்படும் பயணக் கட்டுப்பாடு அன்றிரவு 11 மணி தொடக்கம் ஜுன் மாதம் 04 ஆம் திகதி அதிகாலை 4 மணி வரை தொடர்ந்தும் அமுலில் இருக்கும் என இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

அதேபோல் எதிர்வரும் ஜுன் மாதம் 4 ஆம் திகதி இரவு 11 மணிக்கு மீள அமுல்படுத்தப்படும் பயணக் கட்டுப்பாடு ஜுன் மாதம் 7 ஆம் திகதி வரை தொடர்ந்தும் அமுலில் இருக்கும் எனவும் அவர் அறிவித்துள்ளார்.

இதேவேளை, தனிமைப்படுத்தப்பட்டுள்ள பகுதிகளில் வசிக்கும் மக்கள் பயணக் கட்டுப்பாடு தளர்த்தப்பட்டுள்ள காலப்பகுதியிலும் தங்களின் கிராமத்தை விட்டு வெளியில் செல்ல முடியாது என இராணுவத் தளபதி மேலும் அறிவித்துள்ளார்.

# திருகோணமலையில் நேற்று...

(ஹஸ்பர் ஏ ஹலீம்)



கொவிட்19 அசாதாரண சூழ்நிலை காரணமாக பயணக் கட்டுப்பாடு விதிக்கப்பட்டு நேற்று அதிகாலை 4.00 மணிக்கு தளர்த்தப்பட்டது. இதனை அடுத்து திருகோணமலை மாவட்டத்தில் உள்ள முடக்கப்படாத பகுதிகளில் மக்களின் நிலைமை நடமாட்டத்துடன் காணக்கூடியதாகவுள்ளது.

இதன் ஒரு பகுதியாக தம்பலகாமம் முள்ளிப் பொத்தானை பகுதிகளில் கடைகள் திறக்கப்பட்டுள்ளதுடன் மக்கள் பொருட் கொள்வனவில் ஈடுபடுகிறார்கள் இறுக்கமான முறையில் சுகாதார நடை முறைகளை பின்பற்றி இந் நடவடிக்கைகள் மேற்கொள்ளபடுவதுடன் எரிபொருள் நிரப்பு நிலையங்களில் அதிகமானவர்கள் ஈடுபடுவதையும் அவதானிக்க முடிகிறது வங்கிகள் திறக்கப்பட்டு சேவைகள் இடம் பெற்று வருவதுடன் வீதிகளில் மக்கள் நடமாட்டம் காணப்படுவதையும் அவதானிக்கலாம்.

பொது போக்குவரத்து இன்றி தனியார் வாகனங்கள் பயணிப்பதை காணக்கூடியதாகவுள்ளது. இருந்த போதிலும் கிண்ணியாவில் உள்ள 12 கிராம சேவகர் பிரிவுகள் தொடர்ந்தும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கல்முனையில் நேற்று...

( ஏ.எல்.எம்.ஷினாஸ்)



அம்பாறை மாவட்டத்தின் இயல்பு நிலை இன்று வழமைக்கு திரும்பியது. பொதுமக்கள் அரசாங்கத்தின் அறிவுறுத்தல்களை பின்பற்றி சுகாதார சட்டவிதிமுறைகளுக்கு அமைய தமது அத்தியவசிய தேவைகளை பூர்த்திசெய்யும் நடவடிக்கைகளில் ஈடுபட்டனர்.

அத்தியவசிய பொருட்களை விற்பனை செய்யும் வர்த்தக நிலையங்கள் திறக்கப்பட்டு சுகாதார விதிமுறைகளுக்கு அமைய வியாபார நடவடிக்கைகள் நடைபெற்றன. அரச மற்றும் தனியார் வங்கிகள், எரிபொருள் நிரப்பும் நிலையங்கள் திறக்கப்பட்டிருந்ததுடன் அரச அலுவலகங்களும் இன்றைய தினம் திறக்கப்பட்டு பொதுமக்கள் சேவைகள் நடைபெற்றன.

பொதுச்சுகாதார பரிசோதகர்கள், பொலிஸார் மற்றும் இராணுவத்தினர் ஒன்றிணைந்து விசேட கண்காணிப்பு சோதனை நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர்.

அத்தியாவசிய தேவைகள் தவிர்ந்த போக்குவரத்து மற்றும் ஒன்று கூடல்களை தவிர்த்துக் கொள்வதுடன் சுகாதார விதிமுறைகளை மீறுவோர் மீது நீதிமன்றம் ஊடாக சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்ற அறிவுறுத்தல்களும் சுகாதார தரப்பினரால் வழங்கப்பட்டு வருகின்றன.

# மன்னாரில் நேற்று...



(வாஸ் கூஞ்ஞ)

கடந்த சனிக்கிழமைக்குப்பின் நேற்று செவ்வாய் கிழமை தற்காலிகமாக பயணக்கட்டுப்பாடு நீக்கப்பட்டதும் பொது போக்குவரத்து சேவைகள் இடம்பெறாதபோதும் பலர் மன்னார் நகர் நோக்கி அத்தியாவசியப் பொருட்களை கொள்முதல் செய்வதில் அக்கறை செலுத்தியதைக் காணக்கூடியதாக இருந்தது. அத்துடன் முக்கிய வர்த்தக நிலையங்களிலும் மக்கள் சுகாதாரத்தை கவனத்தில் எடுத்த நிலையில் தங்கள் தேவைகளை பூர்த்தி செய்ததையும் நோக்கக்கூடியதாக இருந்தது.

மன்னார் பகுதியில் அத்தியாவசிய பொருட்கள் விற்பனை நிலையங்கள் மட்டும் திறந்திருந்ததுடன் ஏனைய பெரும்பாலான வர்த்தக நிலையங்கள் மூடப்பட்டே காணப்பட்டன.

ஆனால் கிராமபுற மக்கள் மன்னார் நகர் மற்றும் முக்கிய வர்த்தக நிலையங்களுக்குச் சென்று பொருட்களை கொள்முதல் செய்து கொண்டு செல்வதில் சிரம்மப்படுவதை கவனத்தில் கொண்டு முச்சக்கர வண்டியிலும் மோட்டர் சைக்கிலிலும் செல்வதற்கு மன்னாரில் அனுமதி வழங்கப்பட்டிருந்ததைக் காணக்கூடியதாக இருந்தது.

முக்கிய இடங்களில் பொலிசாரும் இராணுவத்தினரும் கூட்டாக இருந்து பிரயாணம் செய்தவர்களின் நோக்கங்களை கேட்டறிந்தே அவர்களை ஒரு இடத்திலிருந்து மறு இடங்களுக்கு செல்ல அனுமதித்ததையும் காணக்கூடியதாக இருந்தது.

வங்கிகளிலும் பலர் தங்கள் தேவைகளை நிறைவேற்றுவதற்காக வங்கிகளுக்கு வெளியில் சுகாதார இடைவெளியை கவனத்தில் கொண்டு நின்றதும் காணப்பட்டன.

# பாலமுனை பிரதான வீதி பிரதேசத்தில் பாதுகாப்பு படையினர் கடமையில்



(எஸ்.அஷ்ரப்கான்)

பாலமுனை பிரதான வீதி பிரதேசத்தில் விசேட சோதனை நடவடிக்கையில் பாதுகாப்பு படையினர் ஈடுபட்டதுடன் அத்தியவசிய தேவையற்ற பயணிகள் திருப்பியும் அனுப்பப்பட்டனர்.

கொவிட் 19 தொற்றை கட்டுப்படுத்துவதற்காக எடுக்கப்பட்டுள்ளன தீர்மானத்திற்கு அமைய பொருட்கள் கொள்வனவுக்காக வீட்டிலிருந்து ஒருவர் மாத்திரம் அருகிலுள்ள வியாபார நிலையத்திற்குச் செல்வதற்கு அனுமதிக்கப்படுவர் என்ற சட்டத்திற்கு இணங்க இன்று (25) பயணத்தடை தளர்த்தப்பட்டதும் பொதுமக்கள் கூடிய இடங்களில் சன நெரிசலை கட்டுப்படுத்தும் முகமாக பாலமுனை கொரோனா சிகிச்சை பராமரிப்பு நிலையத்தின் முன்னால் விசேட சோதனை நடவடிக்கையில் பொலிசார் மற்றும் இராணுவத்தினர் இணைந்து ஈடுபட்டனர்.

கல்முனை அக்கரைப்பற்று பிரதான வீதியால் பயணிக்கும் பயணிகள் மிக அவதானமாக சோதனையிடப்பட்டதுடன் அத்தியவசிய தேவைகள் நிமிர்த்தம் செல்வோர் மாத்திரம் அக்கரைப்பற்று பிரதேசத்திற்குள் அனுமதிக்கப் பட்டனர். ஏனையோர் இவ்வளியால் செல்லாது திருப்பி அனுப்பப்பட்டதனையும் அவதானிக்க முடிந்தது.

# தாங்களாகவே சிக்கிக்கொண்ட ஹெரோயின் குற்றவாளிகள்

( எச்.எம்.எம்.பர்ஸான்)

மக்கள் நடமாட்டத்தை கட்டுப்படுத்தும் நடவடிக்கையில் ஈடுபட்டு வந்த பொலிஸாரிடம் ஹெரோயின் போதைப் பொருளுடன் இருவர் சிக்கிக் கொண்ட சம்பவம் நேற்று செவ்வாய்க்கிழமை இடம்பெற்றுள்ளது.

வாழைச்சேனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஓட்டமாவடி பகுதியில் தேவையின்றி வீதிக்கு வரும் மக்களை கட்டுப்படுத்தும் பணியில் வாழைச்சேனை பொலிஸார் கடமையில் ஈடுபட்டனர். இந்நிலையில் மோட்டார் சைக்கிளில் ஓட்டமாவடி பிரதான வீதியால் வந்த இருவரை பொலிஸார் நிறுத்திய போது பதற்றமடைந்த இருவரும் தங்களிடமிருந்த ஹெரோயின் போதைப் பொருளை வீசிவிட்டு தப்பிச் செல்ல முற்பட்டுள்ளனர்.

இவ்வாறு போதைப்பொருளைவீசிவிட்டு தப்பிச்செல்ல முற்பட்ட இருவரையும் பொலிஸார் மடக்கிப் பிடித்து கைது செய்துள்ளனர். கைது செய்த இருவரையும் வாழைச்சேனை நீதிமன்றில் ஆஜர்படுத்த பொலிஸார் நடவடிக்கையினை மேற்கொண்டு வருகின்றனர்.









அத்தியவசிய சேவைகளில் ஈடுபடும் அரச உத்தியோகத்தர்களுக்கு கொவிட் தடுப்பூசி ஏற்றும் வேலைத்திட்டத்திற்கிணங்க திருகோணமலை மாவட்ட செயலகத்தில் கடமையாற்றும் முன்னுரிமைப்படுத்தப்பட்ட உத்தியோகத்தர்கள் சிலரிற்கு முதல் கட்டமாக நேற்று மாவட்ட செயலகத்தில் தடுப்பூசி ஏற்றப்பட்டது.

அதன்படி அரசாங்க அதிபரும் மாவட்ட செயலாளருமான சமன் தர்சன பாண்டிகோராள முதல் தடுப்பூசியை பெற்றுக் கொண்டார் இதன்போது எடுக்கப்பட்ட படத்தை காண்க.

படம்: பொன்ஆனந்தம்,கதிரவன்

# அம்பாறையில் 6,200 பி.சி.ஆர்.,3,538 ரபிட் அன்டிஜன் பரிசோதனைகளில் 1109 தொற்றாளர்கள்

(வி.சுகிர்தகுமார்)

பயணக்கட்டுப்பாடுகள் நேற்று அதிகாலை 4 மணிமுதல் தளர்த்தப்பட்ட நிலையில் அம்பாரை மாவட்டத்திலும்; அக்கரைப்பற்று உள்ளிட்ட பிரதேசங்களிலும் மக்கள் தமக்கு தேவையான அத்தியாவசியப் பொருட் கொள்வனவில் ஈடுபட்டதை அவதானிக்க முடிந்தது.

பொது போக்குவரத்து நடவடிக்கைகள் எதுவும் இடம்பெறாத நிலையில் பஸ் தரிப்பிடமும் வெறிச்சோடி காணப்பட்டது.

இதேநேரம் அரச திணைக்களங்களின் செயற்பாடுகள் மற்றும் வங்கிச்சேவைகள் மட்டுப்படுத்தப்பட்ட நிலையில் இடம்பெற்றதுடன் சில வங்கிகளில் தானியங்கி சேவை மூலமாக பணம் பெற அதிகளவான மக்கள் காத்திருந்ததையும் சதொச உள்ளிட்ட நிலையங்களிலும் மக்கள் சுகாதார நடைமுறைகளுடன் பொருட் கொள்வனவில் ஈடுபட்டதையும் பொதுச்சுகாதார பரிசோதகர்கள் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டதையும் காண முடிந்தது.

இந்நிலையில் ஆலையடிவேம்பு பிரதேச செயலாளர் பிரிவிலும் ஆறுபேர் கொரோனா தொற்றாளர் அடையாளப் படுத்தப்பட்ட நிலையில் ஒரு குடும்பத்தை சேர்ந்த மூவர் தொற்றுக்குள்ளாகியுள்ளமையும் இதன் காரணமாக சுகாதாரத்துறையினரால் அன்ரிஜன் பரிசோதனைகளும் கண்காணிப்பு நடவடிக்கைகளும் அதிகரிக்கப்பட்டுள்ளமையும் சுட்டிக்காட்ட முடிகின்றது.

ஆயினும் அம்பாறை மாவட்டத்தில் தொற்றாளர்களின் எண்ணிக்கை 1109 ஆக உயர்வடைந்துள்ளதுடன்; கல்முனை பிராந்தியத்தில் 139 ஆக தொற்றாளர்கள் அடையாளப்படுத்தப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

இதேநேரம் அக்கரைப்பற்று பொலிஸார் பாதுகாப்பு கடமையில் ஈடுபட்டுள்ளதுடன் ரோந்து நடவடிக்கைகளிலும் ஈடுபட்டு வருவதையும் ஒலிபெருக்கி மூலம் அறிவுறுத்தல்களை மேற்கொண்டு வருவதையும் அவதானிக்க முடிந்தது.

இந்நிலையில் கொரோனா 3 அலையின் பின்னர் அம்பாரை மாவட்டத்தில் 6200 பிசிஆர் பரிசோதனைகளும் 3538 ரபிட் அன்ரிஜன் பரிசோதனைகளும் இடம்பெற்றுள்ளதுடன் கல்முனை பிராந்தியத்தில் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஜி.சுகுணனின் மேற்பார்வையில் 2675 பிசிஆர் பரிசோதனைகளும் 1595 ரபிட் அன்ரிஜன் பரிசோதனைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# வாழைச்சேனையில் கடும் நடவடிக்கை



நாடளாவிய ரீதியில் பயணக்கட்டுப்பாடு நேற்று செவ்வாய்க்கிழமை தளர்த்தப்பட்டுள்ள நிலையில் மக்கள் ஒன்று கூடுவதையும், தேவையின்றி வெளிச்செல்வதையும் தடுக்கும் வகையில் பாதுகாப்பு பிரிவினர் அதிரடி நடவடிக்கையினை மேற்கொண்டு வருகின்றனர்.

அந்தவகையில் வாழைச்சேனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் மக்கள் நடமாட்டத்தை கட்டுப்படுத்தும் நோக்கில் வாழைச்சேனை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தனஞ்ஜய பெரமுன தலைமையிலான பொலிஸ் குழுவினர் மற்றும் இராணுவத்தினர் வாழைச்சேனை, ஓட்டமாவடி பிரதேசத்தில் நின்று வீதிகளில் தேவையின்றி வரும் மக்களை சோதனை செய்து வீட்டுக்கு திருப்பி அனுப்பி வைக்கும் நடவடிக்கை இடம்பெற்றது.

அத்தோடு வர்த்தக நிலையங்களில் பொருட்கள் கொள்வனவு செய்வதாக இருந்தால் தூர இடங்களுக்குச் செல்லாமல் தங்கள் வீடுகளுக்கு அருகிலுள்ள கடைகளுக்குச் சென்று பொருட்களை கொள்வனவு செய்யுமாறு பொலிஸாரினால் பொதுமக்கள் அறிவுறுத்தப்பட்டனர்.

# வாழைச்சேனை பொலிஸாரின் அர்ப்பணிப்பு பாராட்டத்தக்கது

## சட்டத்தரணி ஹபீப் றிபான்



(எச்.எம்.எம்.பர்ஸான்)

கொரோனா தொற்றைக் கட்டுப்படுத்த அரசாங்கம் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வரும் இந்நிலையில் வாழைச்சேனை பொலிஸார் மேற்கொள்ளும் நடவடிக்கைகள் பாராட்டத்தக்கது என்று சட்டத்தரணி ஹபீப் றிபான் தெரிவித்தார்.

வாழைச்சேனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் மக்கள் நடமாட்டத்தை கட்டுப்படுத்த பொலிஸார் இரவு பகலாக ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்நிலையில் நேற்று பயணக் கட்டுப்பாடு தளர்த்தப்பட்ட போது அதனைப் பயன்படுத்தி அதிகளவிலான மக்கள் வீட்டை விட்டு வீதிக்கு வந்தனர்.

தகுந்த காரணமின்றி வீதிக்கு வந்த மக்களை கட்டுப்படுத்தும் நடவடிக்கையில் வாழைச்சேனை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தனஞ்ச பெரமுன தலைமையிலான பொலிஸ் குழுவினர் மிகவும் அர்ப்பணிப்போடு ஈடுபட்டனர்.

இந்நிலைமையை நேரில் சென்று பார்வையிட்ட சட்டத்தரணி ஹபீப் றிபான் தங்களது செயற்பாடு பாராட்டத்தக்கது என்று பொலிஸ் பொறுப்பதிகாரியிடம் தெரிவித்ததுடன், கடமையில் ஈடுபட்ட பொலிஸாருக்கு சிற்றுண்டி ஏற்பாடுகளையும் செய்தார்.

இவ்வாறு மக்கள் நலன்களுக்காக வேண்டி பாடுபடும் பொலிஸாருக்கு பொதுமக்கள் பூரண ஒத்துழைப்புக்கள் வழங்க வேண்டும் என்று சட்டத்தரணி ஹபீப் றிபான் தெரிவித்தார்.

# பத்தினித் தெய்வமான கண்ணகை அம்மன் திருக்குளிர்த்தி



(ரக்ஸனா)

ஐம்பெருங்காப்பியங்களில் ஒன்றான சிலப்பதிகாரத்தின் தலைவியான சோழ நாட்டில் பிறந்த கண்ணகி பாண்டிய நாட்டிலே வீரக்கற்பரசியாகி, சேர நாட்டிலே பத்தினித் தெய்வம் என போற்றப்பட்டதுடன், இலங்கையில் தமிழ் மக்கள் செறிந்து வாழும் வடகிழக்கு பகுதிகளில் கண்ணகி வழிபாடு பக்தி பூர்வமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. குறிப்பாக, இந்து ஆலயங்கள் பல இருக்கின்ற போதிலும் கண்ணகை அம்மன் ஆலயங்கள் அதிக சிறப்புப் பெற்றவையாக விளங்குகின்றன.

வருடந்தோறும் வைகாசி மாத பூரணை நாளுக்கு முந்திய வளர்பிறை காலத்தில் சடங்கு நடத்தப்பட்டு திருக்குளிர்த்தி சடங்குடன் நிறைவு பெறுவது வழமையாகும்.

வருடத்துக்கு ஒரு தடவை மாத்திரம் கண்ணகி அம்மன் ஆலயங்களில் திருச்சடங்கு நடைபெறுவதுடன் கிராமங்கள் தோறும் தூய்மையாக்கப்பட்டு, மாமிச உணவுகள் முற்றாக தவிர்க்கப்பட்டு, மிக பக்தி பூர்வமாக கற்புக்கரசி கண்ணகை அம்மனின் சடங்குகள் நடைபெறும்.

இருப்பினும், நாட்டிலே ஏற்பட்டுள்ள கொரோனா தொற்று காரணமாக ஆலயங்களுக்கு பக்தர்கள் மற்றும் கிராம மக்கள் செல்வது முற்றாக தடை செய்யப்பட்டுள்ளதுடன்,

ஆலய குருக்கள் மற்றும் நிர்வாகத்தினர் என மட்டுப்படுத்தப்பட்டோருக்கு மாத்திரம் அனுமதி வழங்கப்பட்டு பூஜைகள் நடைபெற்று வருவதுடன் வருடமொருமுறை இக் கண்ணகி அம்மனை காண்பது பக்தர்களுக்கு கிடைக்காமல் போயுள்ளதுடன், இச் சடங்கு காலத்தின் போது வீட்டிலிருந்தே அம்மனை வேண்டி மக்கள் வழிபட்டு வருகின்றனர்.

இந்நிலையில் கிழக்கில் மிகவும் பழமைவாய்ந்த செட்டிபாளையம் கண்ணகி அம்மன் ஆலயத்தின் வருடாந்த உற்சவம் கடந்த வெள்ளிக்கிழமை திருக்கதவு திறத்தலுடன் ஆரம்பமாகி பகல், இரவு பூஜைகள் நான்கு நாட்களாக இடம்பெற்று நேற்று செவ்வாய்கிழமை அதிகாலை 1.30 மணியளவில் குளிர்த்தி பாடல் பாடி திருக்குளிர்த்தி சடங்குடன் நிறைவு பெற்றது.

இம்முறை கண்ணகை அம்மன் ஆலய திருச்சடங்கு பூஜை நிகழ்வுகள் மிகவும் கடுமையான சுகாதார வழிமுறைகளை பின்பற்றி மட்டுப்படுத்தப்பட்டோருடன் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

# மூதூர் கிழக்கு பிரதேச கல்வியில் பங்களிப்பை செய்துள்ளார்

## அமரர் துரைரட்ணசிங்கம் அஞ்சலி நிகழ்வில் தண்டயுதபாணி

(பொன்ஆனந்தம்)

அமரர் துரைரட்ணசிங்கம் அவர்கள் மூதூர் கிழக்கு பிரதேசத்தில் கல்வியில் குறிப்பிடத்தக்க பங்களிப்பை செய்துள்ளார்.பல பாடசாலைகள் உருவாக காரண கர்த்தாவாக இருந்துள்ளார்.

என முன்னாள் தமிழரசுக் கட்சியின் மாவட்ட க்குழு தலைவரும், முன்னாள் கிழக்கு மாகாண கல்வி அமைச்சருமான சி. தண்டயுதபாணி தெரிவித்தார்.

திருகோணமலை மாவட்டத்தின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அமரர் க. துரைரட்ணசிங்கத்திற்கு இணைய வழிமூலம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் அஞ்சலி செய்தனர்.

இந்நிகழ்வு திங்கள் மாலை 7.00 மணியளவில் யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் ஏற்பாட்டில் நடைபெற்றது.

இங்கு நினைவுரையாற்றும் போதே மேற்படி தகவலை அவர் வெளியிட்டார்.

பாராளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதி ராஜா தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் அவர் மேலும் குறிப்பிடுகையில்,

மூதூர் கிழக்கு ப்பிரதேசம் கல்வியில் பின்னடைவில் இருந்த காலத்தில் அவர் ஆசிரியராக 19 60 ஆண்டு காலப்பகுதியில் பணியாற்ற பொறுப்பெற்றார்.

பல பாடசாலைகளில் பணியாற்றிய இவர் பிற்காலத்தில் சேனையூர் மத்திய கல்லூரியில் பிரதி அதிபராக இருந்து அதிபர் செ. கதிர்காமத்தம்பியுடன் இணைந்து இக்கல்லூரியை வளர்க்க அரும்பாடுபட்டதுடன் இப்பிரதேசத்தின் உயர்கல்விக்கும் களமமைத்து கொடுத்தார்.

இவர்களது காலத்தில் இக்கல்லூரி கணித, விஞ்ஞானப்பிரிவில் கல்வியை ஆரம்பித்து மாணவர்களுக்கு களமைத்து கொடுத்து. பின்னர் இவர் கொத்தணி அதிபராக பணியாற்றிய காலத்தில் பல பாடசாலைகளையும் மூதூர் கிழக்கில் உருவாக்க காரணமாக அமைந்தார். சின்னக்குளம், சம்பூர் சிறி முருகன் வித்தியாலயம் போன்ற பாடசாலை கள் இவரது காலத்தில் தான் உருவாக்கப்பட்டது.

இதன்பிற்பாடு உதவிக் கல்வி அதிகாரியாக திருகோணமலை யில் பணியாற்றி கல்விக்கு பெரும்பங்காற்றினார். ஓய்வு பெற்ற பின்னர் தமிழரசுக்கட்சி மூலம் அரசியலுக்குள் பிரவேசித்து மூன்று முறை பாராளுமன்ற உறுப்பினராக பணியாற்றி உள்ளார். இதன்மூலமே அவரது அரசியல் பிரவேசம் அமைந்து. அந்நாரது இழப்பு இம்மாவட்ட மக்களுக்கு பெரும் இழப்பாக அமைந்துள்ளது என அவர் குறிப்பிட்டார்.

குறித்த நிகழ்வு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் ஏற்பாட்டில் தமிழரசுக்கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா தலைமையில் நடைபெற்றது.

கருத்துரைகளை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர், நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சம்பந்தன் நாடாளுமன்ற உறுப்பினர்களான எம். ஏ. சுமந்திரன், செல்வம் அடைக்கலநாதன், சார்ள்ஸ் நிர்மலநாதன், சாணக்கியன் ,த.கலையரசன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான பா அரியநேத்திரன், யோகேஸ்வரன், சாந்தி சிறீஸ்கந்தராசா தமிழரசுக் கட்சியின் செயலாளரும் ,முன்னாள் வடக்கு மாகாண சுகாதார அமைச்சருமான வைத்திய கலாநிதி சத்தியலிங்கம், முன்னாள் கிழக்கு மாகாண கல்வி அமைச்சர் தண்டாயுதபாணி மற்றும் இரா துரைரட்ணசிங்கத்துடன் கல்விப் பணி செய்தவர்கள் மற்றும் மாணவர்கள்,கலந்து கொண்டு நினைவுகள் செய்தனர்.

அமரர். க.துரைரெட்ணசிங்கம் அவர்களின் மகள் மற்றும் மருமகள் ஆகியோர் நன்றியுரையினை வழங்கியுள்ளனர்.

குறித்த அஞ்சலி நிகழ்வில் வடக்கு,கிழக்கு மாகாணங்களின் உள்ளூராட்சி சபைகளின் தவிசாளர்கள், உறுப்பினர்கள்,தமிழரசுக் கட்சியின் வாலிபர் ,முன்னணியினர் கட்சியின் செயற்பாட்டாளர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

# வெள்ளம் காரணமாக விவசாய காணிகள் முற்றாக பாதிப்பு



(க.கிஷாந்தன்)

வானிலை சீற்றத்தினால் கடந்த சில தினங்களாக மலையக பிரதேசங்களில் கடுமையான மழை மற்றும் பலத்த காற்றும் வீசப்பட்டு வருகின்றது. குறிப்பாக நுவரெலியா மாவட்டத்தில் கடந்த சில தினங்களாக இடைவிடாது பெய்து வரும் அடை மழை காரணமாக பல்வேறு பகுதிகளில் வெள்ளப்பெருக்குடன் சிறு சிறு மண்சரிவுகளும் ஏற்பட்டுள்ளது.

இந்த நிலையில் நுவரெலியா - டயகம பிரதேசத்தில் 24 ஆம் திகதி முதல் பெய்த கடும் மழை காரணமாக டயகம பிரதேசத்திலிருந்து வரும் ஆகர ஆறு பெருக்கம் எடுத்ததனால் டயகம, அக்கரப்பத்தனை, மன்றாசி, திஸ்பனை, ஆகரகந்தை, நாகசேனை, லிந்துலை போன்ற ஆற்றோர பிரதேசங்கள் நீரினால் மூழ்கியுள்ளது.

இதனால் இப்பிரதேசங்களில் விவசாய காணிகள் முற்றாக பாதிப்படைந்துள்ளதுடன், தொழிலாளர்களின் குடியிருப்பு பகுதிகளுக்கும் ஆற்று நீர் உட்புகுந்துள்ளமை குறிப்பிடதக்கது.

# பாடசாலை ஒன்றில் கொள்ளையிட்ட நால்வர் கைது

(பாறுக் ஷிஹான்)



பாடசாலை ஒன்றில் இருந்த பல இலட்சம் பெறுமதியான மின் உபகரணங்களை கொள்ளையிட்ட மூவர் உட்பட நால்வரை சம்மாந்துறை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

அம்பாறை மாவட்டம் சம்மாந்துறை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பகுதியிலுள்ள மலையடி கிராமம் அல் அர்சாத் பாடசாலையில் கடந்த 17 ஆம் திகதி உபகரணங்கள் பல களவாடப்பட்டுள்ளதாக 18.05.2021 அன்று பாடசாலை அதிபரினால் சம்மாந்துறை பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

இதற்கமைய செவ்வாய்க்கிழமை(25) காலை அம்பாறை சம்மாந்துறை பிரதேசத்தில் போதைப்பொருளுடன் சந்தேக நபர்கள் சிலர் நடமாடுவதாக சம்மாந்துறை இரகசிய பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற தகவலுக்கமைய சம்மாந்துறை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி கே.டி.எச். ஜயலத்தின் வழிகாட்டலுக்கமைய சம்மாந்துறை பொலிஸ் நிலைய குற்றப்புலனாய்வு பிரிவின் பொறுப்பதிகாரி கே.சதிஸ்கர் சிறுகுற்றத்தடுப்பு பிரிவு பொறுப்பதிகாரி ஜனோசன் தலைமையில் சென்ற பொலிஸ் உத்தியோகத்தர்களான ஜெயகுமார் துரைசிங்கம் குழுவினர் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையினால் கொள்ளையர் குழு மூவர் களவாடப்பட்ட பொருளை கொள்வனவு செய்த மற்றுமொருவர் உள்ளடங்கலாக நால்வரை கைது செய்தனர்.

கைதான கொள்ளையர் குழு போதைப்பொருளுக்கு அடிமையானவர்கள் எனவும் 23 ,25, 21 வயதினை உடைய இளைஞர்கள் எனவும் பொலிஸார் குறிப்பிட்டனர்.

கடந்த கொரோனா அனர்த்தம் ஆரம்பமான காலத்தில் இருந்து இக்குழு இச்சட்டவிரோத செயற்பாட்டில் ஈடுபட்டு வருவதாகவும் களவாடப்பட்ட பொருட்கள் 3 இலட்சத்திற்கும் அதிகளவான பெறுமதியானதாகவும் இதில் நிழற்பிரதி இயந்திரம் கணனி உபகரணங்கள் மைக்குகள் கொரோனா வெப்பநிலை இயந்திரம் உள்ளிட்ட பொலிஸ் விசாரணையில் இருந்து தெரிய வந்துள்ளது.

Sikaram
துரிதபணமாற்றுச்சேவை
Sikaram INTL Gmbh
Heinrich Strasse 120, 8005 Zürich
Tel : 044 2410241
Fax : 044 2410245
sikaramgmbh@gmail.com / www.sikaram.com

# தனிமைப்படுத்தப்பட்ட பகுதிகளுக்கு பொதிகள் வழங்கி வைப்பு



(ஹஸ்பர் ஏ ஹலீம்)

கொவிட் 19 காரணமாக தனிமை படுத்தப்பட்ட பிரதேசங்களுக்கான ஐந்தாயிரம் ரூபா பெறுமதியான பொதிகள் அரசினால் வழங்கப்பட்டு வருகின்றது.

கிண்ணியா பிரதேச செயலகப் பிரிவில் தனிமைபடுத்தப்பட்ட 12 கிராமங்களிலும் முதல் கட்டமாக ஐந்தாயிரம் ரூபா பெறுமதியான ஒரு தொகை பொதிகள் கிண்ணிய பிதேச செயலகத்திற்குட்பட்ட குறிஞ்சாக்கேணி ,பெரியகிண்ணியா பகுதிகளில் (24) வழங்கிவைக்கப்பட்டன.

குறித்த பொருட்களை கிண்ணியா பிரதேச செயலாளர் எம்.எச்.ஹனி உள்ளிட்ட பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் சகிதம் வழங்கி வைக்கப்பட்டது.

கடந்த 14.05.2021 ந்திகதி அன்று தனிமைப்படுத்தப்பட்ட பகுதிகள் இற்றை வரை தொடர்ந்தும் உள்ளது.

வீடு வீடாக கொண்டு சென்று இப்பொதிகள் வழங்கப்பட்டடதோடு ஐந்தாயிரம் ரூபாவுக்குரிய பொருட்கள் சரியாக உள்ளதா என்பதையும் பரிசீலனை செய்து வழங்கி வைக்கப்பட்டது.

வழங்கப்பட்ட பொதிகளில் ஏதாவது குறைபாடு காணப்படின் உரிய கிராம உத்தியோத்தருக்கு அல்லது பிரதேச செயலாளருக்கு தெரிவிக்க முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது

இதன் போது பெரியாற்று முனை பகுதியில் 150 ராத்தல் பான்களும் வழங்கப்பட்டன.

அரசினால் வழங்கபட்ட இப் பொதிகளை பெற்று கொண்ட போது மக்கள் அரசாங்கத்திற்கும் அதிகாரிகளுக்கும் நன்றிகளையும் இதன் போது தெரிவித்திருந்தனர்.

குறித்த உலர் உணவு பொதிகள் தொடர்ந்தும் ஏனைய தனிமைப்படுத்தப்பட்ட கிராம சேவகர் பிரிவுகளுக்கும் வழங்கப்படவுள்ளதாக பிரதேச செயலாளர் தெரிவித்தார்.

# கண்ட இடத்தில் கழட்டி வீசப்படும் முகக்கவசங்கள்!

(எச்.எம்.எம்.பர்ஸான்)

கொரோனா தொற்றிலிருந்து நாட்டு மக்களை பாதுகாக்க வேண்டி அரசாங்கம் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது.

இந்நிலையில், ஒருவர் கொரோனா தொற்றிலிருந்து பாதுகாப்புப் பெற முகக்கவசம் அணிவது கட்டாயமாகும். குறித்த முகக் கவசத்தை ஒருவர் எவ்வாறு பயன்படுத்த வேண்டும். பாவித்த முகக் கவசத்தை எப்படி அகற்றி அதனை அப்புறப்படுத்த வேண்டும் என்றெல்லாம் ஏராளமான



கவசங்களை பயன்படுத்தியோர் கொரோனா தொற்றுக்குள்ளாகி இருந்தால் இவ்வாறு பொது இடங்களில் வீசப்பட்டுக் காணப்படும் முகக் கவசங்கள் மூலம் ஏனையோருக்கும் தொற்றுக்கள் ஏற்படக் கூடும் என்று மக்கள் அச்சப்படுகின்றனர்.

குறித்த பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வீதிகள், வடிகான்கள், சந்தைப் பகுதிகள் உட்பட சனநடமாட்டம் உள்ள இடங்களில் பொறுப்பற்ற விதத்தில் பயன்படுத்திய முகக் கவசங்களை வீசிச் செல்கின்றனர்.

இவ்வாறு பொறுப்பற்ற விதத்தில் நடந்து கொள்ளும் நபர்களுக்கு எதிராகா பாதுகாப்புப் படையினர் சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பொதுமக்கள் வேண்டிக் கொள்கின்றனர்.

# தனியார் பஸ் உரிமையாளர்களின் ஆவணங்கள் மறைப்பு ஊழல்: மோசடியை வெளிப்படுத்தியதால் அநீதி இழைப்பு

(பைஷல் இஸ்மாயில்)

தனியார் பஸ் உரிமையாளர்களுக்கு அரசாங்கத்தால் வழங்கப்படும் வங்கிக் கடனை கிழக்கு மாகாண வீதிப்பயணிகள் போக்குவரத்து அதிகாரசபையின் தற்காலிக திட்டமிடல் பணிப்பாளர் பஸ் உரிமையாளர்களின் ஆவணங்களை வங்கிகளுக்கு வழங்காமல் பஸ் உரிமையாளர்களை பழி தீர்க்கும் நோக்கில் நடந்துகொள்வதாக பாதிக்கப்பட்ட பஸ் உரிமையாளர்கள் சங்கத்தின் தென்கிழக்கு கரையோர தனியார் போக்குவரத்து சங்க செயலாளர் எம்.எஸ்.பைறூஸ் தெரிவித்தார்.

இது தொடர்பிலான ஊடக சந்திப்பு நேற்று(25) தென்கிழக்கு கரையோர தனியார் போக்குவரத்து சங்க அட்டாளைச்சேனை காரியாலத்தில் இடம்பெற்றபோது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

கிழக்கு மாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகார சபையின் அதிகாரிகள் செய்த ஊழல் மோசடிகளை அவ்வப்போது வெளிப்படுத்தி அவர்களுக்கு



எதிராக பொலிஸில் முறைப்பாடு செய்ததுடன் நீதி மன்றில் வழக்கு தாக்கலும் செய்துள்ளோம். அதற்கு பழி தீர்க்கும் வகையிலேயே இந்த செயற்பாட்டை செய்துள்ளனர்.

கிழக்கு மாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகாரசபையில் ஊழல் மோசடிகள் இடம்பெறும் போது அதனை கண்டுகொள்ளாமல் இருக்கச் சொல்வதும், அதனை மீறி செயற்படுபவர்களை இவ்வாறு பழி தீர்ப்பது சரியான விடயமா? அது மாத்திரமல்லாமல் அவர்களின் சார்பில் நடந்து கொள்ளும் நபர்களின் ஆவனங்கள் வங்கிக்கு அனுப்பப்பட்டு அவர்கள் அந்தக் கடனையும் பெற்றுள்ளனர். இது எந்த வகையில் நியாயமானது என்றும் நாம் கேட்கின்றோம். இது சம்மந்தமாக கிழக்கு மாகாண ஆளுநரின் செயளாளருக்கும் போக்குவரத்து அதிகார சபையின் தலைவருக்கும் தெரிவித்துள்ளோம்.

கிழக்கு மாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகார சபையில் பஸ் உரிமையாளர்களின் வங்கி ஆவணங்களை வங்கிக்கு அனுப்பாமல் ஒழித்த வைத்த அதிகாரிக்ளுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் என பஸ் உரிமையாளர்கள் சங்கம் கோட்டுக் கொள்வதோடு திட்டமிடல் பணிப்பாளர் பதவிக்கு தகமையுள்ள, பொருத்தமான ஒருவரை உடனடியாக நியமிப்புச் செய்வதற்கான நடவடிக்கையையும் மேற்கொள்ளுமாறு கிழக்கு மாகாண ஆளுநரை கோருவதாகவும் அவர் இதன்போது கேட்டுக்கொண்டுள்ளனர்.

# பக்தரின்றி நிறைவுபெற்ற அம்மன் குளிர்த்தி சடங்கு!





(வி.ரி.சகாதேவராஜா)

வரலாற்றுப்பிரசித்திபெற்ற காரைதீவு ஸ்ரீ கண்ணகை அம்மன் ஆலயத்தின் வருடாந்த திருக்குளிர்த்திச்சடங்கு வரலாற்றில் முதல் தடவையாக பக்தர்களின் பிரசன்னமின்றி இனிதே நடைபெற்று நிறைவுற்றிருக்கிறது.

நேற்று (25) அதிகாலை 4மணியளவில் திருக்குளிர்த்தி பாடும் சடங்கு ஆரம்பமாகி 5.30மணியளவில் நிறைவுற்றது.

அன்ரிஜன் சோதனை செய்யப்பட்ட 10 ஆலயநிருவாகிகளுடன் இச்சடங்கு அத்தனை நாட்களிலும் நடைபெற்று வந்தன. அவர்கள் வெளியில் வராமல் ஆலயத்தினுள் தங்கியிருந்தே இதனை மேற்கொண்டிருந்தனர்.

கடந்த எட்டு நாள் சடங்குகள் அனைத்தும் வானொலி மற்றும் முகநூல் காணொளியினுடாக ஒலி ஒளி பரப்புச்செய்யப்பட்டு வந்தன.

அதேபோல் நேற்று அதிகாலையிலும் இவ் ஒலிஒளிபரப்பு இடம்பெற்றது. அதனை உள்நாட்டிலும் புலம்பெயர்தேசத்திலுள்ள அம்மனடியார்கள் வீட்டிலிருந்தவாறே கண்டுகளித்ததுடன் வணங்கி வழிபட்டனர்.

# கல்முனை பொலிசாரினால் திடீர் சோதனை நடவடிக்கைகள்



(சர்ஜூன் லாபீர்)

ஜனாதிபதி கோட்டாபாய ராஜபக்ஷ அவர்களின் தலைமையில் ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்ற கொவிட் தடுப்புக் குழுக் கூட்டத்தில் கொவிட் 19 தொற்றை கட்டுப்படுத்துவதற்காக எடுக்கப்பட்டுள்ளன தீர்மானத்திற்கு அமைய பொருட்கள் கொள்வனவுக்காக வீட்டிலிருந்து ஒருவர் மாத்திரம் அருகிலுள்ள வியாபார நிலையத்திற்குச் செல்வதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இதற்கமைய நேற்று (25) பயணத்தடை தளர்த்தப்பட்டதும் கல்முனை பிரதேசத்தில் அதிகளவிலான சன நெரிசல் ஏற்பட்டுள்ளதால் உடனடியாக தனிப்பட்ட வாகனங்களில் வியாபார நிலையங்களுக்கும்,ஏனைய அலுவல்களுக்கும் செல்லுவதற்கு கல்முனை பொலிசார் தடை விதித்து பொதுமக்களை திருப்பி அனுப்பினர்.

இதனால் பொதுமக்களின் சன நெரிசல் குறைக்கப்பட்டதுடன் மக்கள் சுகாதார வழிமுறைகளை பின்பற்றி தங்களுடைய பொருட்களை கொள்வனவு செய்வதற்கு ஏற்புடையதாக இருந்தது.

PHOTO DIGITAL INTERNATIONAL
No. 6N, Mosque Lane, Kalmunai.
MASTER PRINTERS
Best Regional Printer For the Year 2013
No. BG6, Maligawatta National House Scheme, Colombo 10.
Mobile : 077 613 9227 / 075 260 0333 / 075 963 0000 E-mail : mmjesmin06@gmail.com